# QB365 Question Bank Software Study Material

## பன்னாட்டுப் பொருளியல் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) பணத்தின் இலக்கணம் வரைக.

**பதில் :** "பணம் எதைச் செய்கிறதோ, அதுதான் பணம்" என்று வாக்கர் கூறுகிறார்.(அல்லது)
“பரிவர்த்தனைகளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக்கருவியாகவும், மதிப்பளவை மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினைச் செய்யும் ஒன்றாகவும் இருப்பது பணம் ஆகும்” என்று கிரௌதர் கூறுகிறார்.

2) பண்டமாற்று என்றால் என்ன?

**பதில் :** பிறரிடமிருந்து தங்களுக்கு தேவையான பொருட்களை அல்லது பணிகளை பெறும் பொருட்டுகு. தங்களிடம் உள்ள பொருட்களை அல்லது பணிகளை மாற்றாக வழங்குவது பண்டமாற்று முறையாகும்.

3) பண்டப்பணம் என்றால் என்ன?

**பதில் :** 1. பண்ட பணம் என்பது அதன் தயாரிக்கப்பட்ட பண்டத்திலிருந்து பெறப்படுகிறது.
2. பண்டத்தின் உபயோகத்தை பொருத்து அதன் மதிப்பு தீர்மானிக்கப்படுகிறது.

4) பொன் திட்டம் என்றால் என்ன?

**பதில் :** 1. ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது.
2. ஒரு பண அலகின் வாங்கு திறன் அப்பொன் பணத்தின் எடை சமமாக நிர்வகிக்கப்பட்டு வந்தது.

5) நெகிழிப் பணம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

**பதில் :** 1. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பணம் நெகிழிப் பணமாகும். இது நிதிப் பொருட்களின் வரிசையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தோற்றமாகும்.
2. நெகிழ்வுப் பணம்(Plastic Money) நடைமுறையில் உள்ள காகித பணத்திற்கு மாற்றாகும். தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் நெகிழி அட்டையில் உருவாக்கப்பட்டிருப்பதால் இது நெகிழிப் பணம் என்றழைக்கப்படுகிறது.
(உ.ம்) ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை போன்றவை ஆகும்.

6) பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக.

**பதில் :** “குறைந்த அளவுப் பண்டங்களை அதிக அளவுப் பணம் துரத்தும் நிலை” - என கோல்பர்ன் கூறுகிறார்.
(அல்லது)
“வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண குறைவு நிலையாகும்” - என்று கிரிகெரி இலக்கணம் வகுத்துள்ளார்.

7) தேக்கவீக்கம் என்றால் என்ன?

**பதில் :** தேக்க வீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலையும் வேலை வாய்ப்பின்மையும், அதிக அளவிலான பண வீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்.

8) பணவியல் பொருளியல் என்றால் என்ன?

**பதில் :** (i) பொருளியலின் ஒரு பகுதி பணவியல் பொருளியல்.
(ii) பணம், அவற்றின் பணிகள், பணத்தை நிர்வகிக்கும் நிறுவனங்களை உள்ளடக்கிய பண அமைப்பு முறையின் செயல் விளைவுகளையும் ஆராய்கிறது.

9) வெள்ளித் திட்டம் என்றால் என்ன?

**பதில் :** (i) ஒரு பணத்தின் அலகு குறிப்பிட்ட அளவிலான வெள்ளி உலோகத்தின் மதிப்பிற்கு ஈடானதாக இருந்தது.
(ii) இம்முறையில் ஒரு நாட்டின் அரசு அதன் பணத்தை எப்பொழுது வேண்டுமானாலும் வெள்ளியாக அனுமதியினை வழங்கியிருந்தது.

10) பணவாட்டம் என்றால் என்ன?

**பதில் :** (i) விலைவாசி குறைதல், குறைந்த பண அளிப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆகியன பணவாட்டத்தின் இயல்புகள்.
(ii) பணவாட்டத்தின் போது விலைவாசி குறைதல் என்பது நுகர்வோருக்கு விரும்பத்தகுந்த ஒன்றாக இருந்தாலும், அக்குறைவு உற்பத்தியையும், வேலை வாய்ப்பையும் குறைக்கும் அளவுக்கு இருக்கக் கூடாது.
(iii) முழுவேலைவாய்ப்புள்ள நிலையில் விலைவாசி குறைந்தால் அது வருமானம் மற்றும் வேலைவாய்ப்பில் விரும்பத்தகாத விளைவினை ஏற்படுத்தும்.

**<u>3 மதிப்பெண் வினாக்கள்</u>** 10 x 3 = 30

11) உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக.

**பதில் :** உலோகத் திட்டம் (Metalic Standard) :
1. பண்டமாற்று முறை, பண்டப் பணமுறைக்குப் பின் புதிய பண முறைகள் தோன்ற ஆரம்பித்தது. அதில் முதன்மையானது உலோகப் பணத்திட்டம் ஆகும்.
2. உலோகத்திட்டத்தில் தங்கம், வெள்ளி போன்ற ஏதாவது ஒரு உலோகம் பணத்தின் திட்ட மதிப்பினை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்பட்டது.
3. உலோகத் திட்டத்தின் கீழ் உலோக நாணயங்கள் பணமாக உருவாக்கப்பட்டன.
4. இந்த நாணயங்கள் முழு மதிப்புப் பணமாக அல்லது முழு நிறையுடைய சட்டமுறைப் பணமாக இருந்து வந்தன.
3. அதாவது அந்நாணயங்களில் முக மதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாக இருந்தன.

12) பண அளிப்பு என்றால் என்ன?

**பதில் :** 1. ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்த பண அளவே பண அழிப்பு ஆகும்.
2. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் புழக்கத்தில் உள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பதாகும்.
3. வட்டி விகிதம், விலைவாசி போன்றவற்றை நிர்ணயிப்பதில் பண அழிப்பு முக்கியப் பங்காற்றுகிறது.
4. குறிப்பிட்ட காலத்தில் பண அளிப்பு நிலைக் (stock) கருத்தாகவும் ஒரு கால இடைவெளியில் தடையிலா ஓட்டக் (flow) கருத்தாகவும் உள்ளது.

13) பண அளிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

**பதில் :** **1. ரொக்க வைப்பு விகிதம் (Cash Deposit Ratio - CDR)** : இது பொதுமக்கள் கையில் வைத்திருக்கும் பணம்/ வங்கி வைப்புகளில் உள்ள பணம் என்ற விகிதத்தை குறிக்கும்.
**2. ரொக்க இருப்பு வைப்பு விகிதம் (Reserve Deposit Ratio - RDR)**: வங்கி தனது பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருக்கும் இருப்பு மற்றும் மைய வங்கியில் வைத்திருக்கும் ரொக்க வைப்பு / மொத்த வைப்புகள் என்ற விகிதம்.
**3. ரொக்க இருப்பு விகிதம் (Cash Reserve Ratio - CRR)** : "வங்கியில் வைப்புகளில் குறைந்தபட்சமாக மைய வங்கியில் வைக்க வேண்டிய அளவு/ வங்கிகளில் செலுத்தப்பட்ட மொத்த வைப்புகள்" என்ற விகிதம்.
**4. சட்டபூர்வ நீர்மை விகிதம் (Statutory Liquidity Ratio - SLR)** : " வணிக வங்கிகள் வைத்திருக்கும் நீர்மை தன்மையிலான சொத்துக்கள்/ வணிக வங்கிகளில் இருக்கும் மொத்த கேட்பும் மற்றும் கால வைப்புகளும்" என்ற விகிதம்.

14) பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.

**பதில் :** **i) தவழும் பணவீக்கம் :** தவழும் பணவீக்கம் மிகக் குறைவான, எளிமையான விகித்தில் பணவீக்க விகிதம் இருப்பதாகும். நீண்ட காலத்தில் விலைவாசி உயர்வதை மக்கள் எளிதாக உணர முடியாத அளவில் இருக்கும் பணவீக்கமே தவழும் பணவீக்கம் எனப்படுகிறது. இது மிதமான பணவீக்கம் (Mild Inflation) எனப்படுகிறது.
**ii) நடக்கும் பணவீக்கம் :** பணவீக்கம் மிதமான வேகத்தில் ஒற்றை இலக்கத்தில், அதாவது 3 முதல் 9 விழுக்காடு அளவில் இருந்தால் அது நடக்கும் பணவீக்கம் அல்லது நகரும் பணவீக்கம் (Trolling Inflation) என்றழைக்கப்படுகிறது.
**iii) ஓடும் பணவீக்கம் :** ஆண்டு பணவீக்க விகிதம் 10 முதல் 20 விழுக்காட்டிற்குள் இருந்தால் அது ஓடும் பணவீக்கம் எனப்படுகிறது. வேகமான விலைவாசி அதிகரிப்பை ஓட்டத்துடன் உவமைப்படுத்திச் சொல்வதால் அது ஓடும் பணவீக்கம் எனப்படுகிறது.
**iv) தாவும் பணவீக்கம் :** தாவும் பணவீக்கம் அல்லது உயர் பணவீக்கம் என்பது சமாளிக்க முடியாத அளவிற்கு இரண்டு அல்லது மூன்று இலக்க விழுக்காட்டில் உள்ள பணவீக்கம் ஆகும்.

15) தேவை-இழுப்புப் பணவீக்கம், செலவு உந்து பணவீக்கம் ஆகியவற்றை விளக்குக

**பதில் :** **i) தேவை-இழுப்புப் பணவீக்கம்:**
அளிப்புநிலையாக உள்ள நிலையில் பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் பொழுது விலைவாசி உயருகிறது. இது தேவை இழப்பு பணவீக்கம் என்றழைக்கப்படுகிறது.
**ii). செலவு உந்து பணவீக்கம்:**
உற்பத்தியில் மூலப்பொருட்கள் இதர இடுபொருட்களுக்கான செலவு உயருகின்றது பொழுது உற்பத்திச் செலவு கூடி பண்டங்களுக்கான விலை அதிகரிக்கின்றது. இவ்வகை பணவீக்கம் செலவு-உந்து பணவீக்கம் எனப்படுகிறது.

16) பண மதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.

**பதில் :** கேம்பிரிட்ஜ் அணுகுமுறை (ரொக்க இருப்பு அணுகுமுறை)

1. மார்ஷலின் சமன்பாடு பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:

M = KPY இங்கு

M = பணத்தின் அளவு

Y = சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானம்

P = பொது விலைமட்டம்

K = மக்கள் தங்கள் கையில் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானத்தின் ஒரு பகுதி

மேற்கண்ட சமன்பாட்டினை மாற்றி எழுதும் பொழுது, P=M/KY என்று பொதுவிலை மட்டத்தினை (P) யைக் காண உதவுகிறது.

2. கீன்சின் முதல் சமன்பாடு பின்வரும் வகையில் அமைகின்றது:

n = PK (or) P = n/K

இங்கு

N = மொத்த பண அளிப்பு

P = நுகர்ச்சிப் பண்டங்களின் விலை மட்டம்

K = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் வருமானத்தின் ஒரு பகுதி - நுகர்ச்சிப் பண்டங்களின் அலகுகளில் கீன்சு k என்பதனை உண்மை இருப்பு (Real Balance) என குறிப்பிடுகிறார். ஏனெனில் மக்களின் ரொக்கக் கையிருப்பு இங்கு நுகர்ச்சிப் பண்டங்களின் அளவுகளில் கணக்கிடப்படுகிறது.

17) மீள் பணவீக்கம் பற்றி விளக்குக?

**பதில் :** 1. வேலை வாய்ப்பினைப் பாதிக்காத வகையில் கடன்களை (வங்கிக் கடன், தவணைமுறை கொள்முதல் முறைகளை) கட்டுப்படுத்துவதன் மூலமும் பணவீக்கத்தினைக் குறைத்து வருவது மீள்பணவீக்கம் ஆகும்.

2. மீள் பணவீக்கம் என்பதனைப் பின்வருமாறு வரையறுக்கலாம்:

3. “வேலை வாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தைத் திருப்பும் செயல்முறையே மீள்பணவீக்கம் ஆகும்”.

18) பண அளிப்பு பற்றி விளக்கம் தருக?

**பதில் :** பொருளாதாரத்தில் உள்ள மொத்தப் பண அளிப்பு ஆகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் புழக்கத்தில் உள்ள அளவைக் குறிக்கும்.

இந்தியாவில் காகிதபணம் RBI -லும், நாணயங்கள் மத்திய அரசின் நிதித்துறையாலும் வெளியிடப்படுகிறது.

வங்கிகளிலுள்ள மக்களின் இருப்பு தொகைகளும் பணமாக கருதப்படுகிறது.

19) பணக் குறியீடு பற்றி எழுது?

**பதில் :** மும்பை, இந்திய தொழில்நுட்பக்கழகத்தில் (IIT) திரு. D. உதயகுமாரால் வடிவமைக்கப்பட்ட புதிய பணக்குறியீடு ஜூலை 15 2010-ல் மத்திய அமைச்சரவை கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேவநாகரி எழுத்து 'ரா' வும், ரோமன் எழுத்து 'R' இல் செங்குத்து கோடு இல்லாமலும் உள்ள வடிவமைப்பாகும்.

20) பணவீக்கத்தில் கூலி விலை சூழல் பற்றி எழுது?

**பதில் :** கூலி விலை சூழல் மூலம் கூலி உயர்வுக்கும் பணவீக்கத்திற்கும் இடையேயான காரண-விளைவு உறவு விளக்கப்படுகிறது. கூலி உயரும் போது, வருவாய் உயர்ந்து தேவை உயருகிறது. தேவை உயரும் போது பொருளின் விலையும் உயருகிறது. இதன் விளைவாக பணவீக்கம் ஏற்படுகிறது.

விலைவாசி உயர்வு காரணமாக, கூலி, உயர, அதனால் உற்பத்தி செலவு கூட அதனால் மீண்டும் விலை உயரும் ஒரு சூழலை ஏற்படுத்துகிறது.

**5 மதிப்பெண் வினாக்கள்** 5 x 5 = 25

21) இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.

**பதில் :** பண அளவுக் கோட்பாடுகள் பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்பிற்கும் இடையேயான தொடர்பினை எடுத்துரைப்பவையாகும்.

∴பிஷரின் பண அளவுக் கோட்பாடு :

பண அளவுக் கோட்பாடு என்பது மிக பழமையானக் கோட்பாடு ஆகும்.

இர்விங் பிஷர் தனது கோட்பாட்டினை "பரிவர்த்தனை சமன்பாடு" என்ற கணித சமன்பாட்டின் வாயிலாக வழங்கியுள்ளார்.

இச்சமன்பாட்டின் பொது வடிவம்:

MV = PT

M = மொத்த பண அளவு

V = பணத்தின் சுழற்சி வேகம்

P = பொது விலை மட்டம்


T = வாணிபத்தின் அளவு

∴பிஷர் ஒரு நாட்டில் குறிப்பிட்ட கால அளவில் மொத்த பண அளிப்பு (MV) என்பது நாட்டில் வாங்க-விற்கப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் அளவின் பண மதிப்பிற்கு (அதாவது மொத்த பணத் தேவைக்கு) PT சமமாக இருக்கும் என்று குறிப்பிடுகின்றனர்.

MV = PT  (பண அளிப்பு = பணத்தேவை)

**வரைபட விளக்கம்:**

1. வரைபடம் (A) மொத்த பண அளவில் ஏற்படும் மாற்றம் விலை மட்டத்தில் எவ்வாறு மாறுகிறது என்று விளக்குகிறது.
2. பண அளவு OM ஆக இருக்கும் போது விலை மட்டம் OP-ஆக உள்ளது.
3. பிறகு பண அளவு $OM_2$ ஆக இரட்டிப்பாக்கும் பொழுது விலை மட்டம் $OP_2$ ஆக இரட்டிப்பாகிறது.
4. மேலும் பண அளவு $OM_4$ என நான்கு மடங்காகும் போது விலை மட்டமும் $OP_4$ என நான்கு மடங்காகிறது
5. விலைமட்டச் சார்பு OP = f(M) க்கான நேர்கோடு வரைபடத்தின் தோற்றுவாயிலிருந்து $45^o$ கோடாக அமையும்பொழுது பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்கும் உள்ள நேரடி சமவிகித உறவு விளங்குகிறது.




வரைபடம் (B) பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்பிற்கும் உள்ள தலைகீழ் உறவினை விளக்குகிறது.

22) பணத்தின் பணிகளை விளக்குக.

**பதில் : அ. முதல்நிலைப் பணிகள் :**

i) பணம் ஓர் பரிமாற்றக் கருவியாக: இது பணத்தின் அடிப்படை பணியாகும். பணம் பொது ஏற்புத் தன்மையைக் கொண்டது. மேலும், இது அனைத்துப் பரிவர்த்தனைகளிலும் தவறாது இடம்பெறுகிறது.

ii) பணம் ஓர் மதிப்பின் அளவுகோலாக : பொருட்கள் மற்றும் பணிகளை மதிப்பளவை செய்வது பணத்தின் இரண்டாவது முக்கிய பணியாகும். ஆகவே, பணம் ஒரு பொது அளவுகோலாக பார்க்கப்படுகிறது.

**ஆ. இரண்டாம் நிலைப் பணிகள்**

i) பணம் ஒரு மதிப்பின் நிலைக்கலனாக: பண்டங்களைச் சேமிப்பாக வைத்திருந்தால் அது நிலைத்திருக்காது. ஆனால் பணம் கண்டுபிடிக்கப்பட்ட பின் பண்டங்களையும் பணிகளையும் சேமித்து வைப்பதில் உள்ள சிக்கல்கள் மறைந்துவிட்டன.

ii) பணம் வருங்காலச் செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை: பண்டமாற்று முறையில் கடன் வாங்குவதிலும் திருப்பிச் செலுத்துவதிலும் சிக்கல் நிறைந்திருந்தது. பணம் வருங்கால செலுத்துதல்களுக்கு இடையீட்டுக் கருவியாகச் செயல்படுகின்றது.

iii) பணம் வாங்கும்திறனை மாற்றிக் கொள்ளும் ஒரு கருவியாக : பொருளாதார வளர்ச்சியினை ஒட்டி பரிமாற்றம் விரிவடைந்து செல்கிறது.

**இ. துணைப்பணிகள் :**

i) கடனுக்கான அடிப்படை : கடன் முறைக்கு அடிப்படையாக பணம் அமைந்துள்ளது. வணிக வங்கிகள் வாடிக்கையாளர் கணக்குகளில் உள்ள ரொக்க இருப்பின் அளவை பொருத்தே கடன்களை உருவாக்குகின்றன.

ii) பணம் நாட்டு வருமானப் பங்கீட்டிற்கு உதவுகிறது: பண்டமாற்று முறையில் நாட்டு வருமானப் பங்கீடானது மிகச்சிக்கலான ஒன்றாகும். ஆனால், பணம் என்ற கருவி கண்டறியப்பட்ட பின் வாரம், கூலி, வட்டி, இலாபம் என காரணிகளுக்கான வருமானத்தை, அதாவது நாட்டு வருமானத்தை எளிதாகப் பகிர்ந்தளிக்க முடிகிறது.

iii) இறுதிநிலைப் பயன்பாடுகளையும், இறுதி நிலை உற்பத்தித் திறன்களையும் சமன் செய்திட பணம் பயன்படுகிறது: நுகர்வோர் தனது மொத்தப் பயன்பாட்டினை உச்சநிலைப்படுத்தும் நோக்கில் தாம் நுகரும் பல்வேறு பண்டங்களின் இறுதிநிலைப் பயன்பாடுகளை பணத்தின் துணையுடன் சமப்படுத்த வேண்டியதாகிறது.

iv) பணம் மூலதனத்தின் உற்பத்தித்திறனை உயர்த்துகிறது : மூலதனம் பல்வகை வடிவங்களில் காணப்படுகிறது. பணம் நீர்மைத் தன்மை கொண்ட ஒரு மூலதனமாகும்.

**ஈ. இதர பணிகள் :**

i) திரும்பச் செலுத்தும் திறனை தக்கவைக்க பணம் உதவுகிறது: பணம் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு சாதனமாகும். நிறுவனங்கள் தங்களின் செலுத்துதல்களை மேற்கொள்ள எப்பொழுதும் குறிப்பிட்ட அளவு ரொக்கப் பணத்தை தயார் நிலையில் வைத்திருக்கும்.

ii) பணம் பொதுமைப்படுத்தப்பட்ட வாங்கு திறனைக் குறிக்கிறது : எந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காக அந்த பணம் எனும் வாங்குதிறன் சேமித்து வைக்கப்பட்டதோ, அதை மட்டுமே வாங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

iii) பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையைத் தருகிறது : பணம் என்பது நீர்மைத் தன்மை கொண்ட ஒரு மூலதனமாகும். இதன் துணையுடன் அனைத்து இடு பொருட்களையும் வாங்குவதன் மூலம் எந்த ஒரு செய்பொருளையும் உற்பத்தி செய்ய இயலும்.

23) ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள், விளைவுகள் யாவை?

பதில் : **பணவீக்கத்திற்கான காரணங்கள் :**

**1. பண அளிப்பு உயர்வு:** காகிதப் பண அளிப்பு உயர்வினால் மொத்த தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.

**2. செலவிடத் தகுந்த வருமான உயர்வு :** மக்களின் செலவிடத் தகுந்த வருமானம் அதிகரிக்கும் பொழுது அவை பண்டங்கள், பணிகளுக்கான தேவையைத் தூண்டுகின்றன.

**3. உயர்ந்து வரும் பொதுச் செலவுகள் :** வளர்ச்சித் திட்டங்கள், சமுதாய நலத் திட்டங்கள் ஆகியவற்றை அமல்படுத்துதல் அரசின் செயல்பாடுகள் விரிவடைந்து வருவதால் பொதுச் செலவுகளின் அளவு கூடி வருகிறது.

**4. நுகர்வோர் செலவு அதிகரித்தல் :** தவணைக் கொள்முதல் முறைகளும் கடன் கொள்முதல் முறைகளும் அமல்படுத்தப்படுவதால் நுகர்ச்சிப் பண்டங்கள், பணிகளுக்கான தேவை அதிகரித்து அதன் காரணமாக விலைவாசி அதிகமாகி பணவீக்கம் ஏற்படுகிறது.

**5. மலிவுப் பணக் கொள்கை :** மைய வங்கியின் மலிவுப் பணக்கொள்கை பொருளாதரத்தில் கடன் அளவை அதிகப்படுத்தும்.

**6. பற்றாக்குறை நிதியாக்கம் :** தொடர்ந்து பொதுச் செலவுகள் கூடிவருவதால், அரசின் வரவு செலவு திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படுகிறது.

**7. கணக்கில் காட்டப்படாத சொத்துகள் நடவடிக்கைகள், கறுப்புப் பணம் ஆகியன:** இலஞ்சம், வரி ஏய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கறுப்புப் பணமும் கணக்கில் காட்டப்படாத சொத்துக்கள் உருவாகின்றன.

**8. பொதுக்கடனை மீளச் செலுத்துதல்:** உள்நாட்டில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட பொதுக்கடனை அரசு திரும்பச் செலுத்தும்பொழுது மொத்தப் பண அளிப்பில் அதிகரிப்பு ஏற்படுகிறது.

**9. ஏற்றுமதி உயர்வு:** ஏற்றுமதியை ஊக்கப்படுத்தும் பொழுது உள்நாட்டில் பொருள் அளிப்பு குறைந்து, விலைவாசி உயர்வு ஏற்படுகிறது.

**பணவீக்கத்தின் விளைவுகள் :**

**அ. உற்பத்தியின் மீதான விளைவுகள் :**

1. மிதமான பணவிக்கம் உற்பத்தியாளர்களுக்கும், வணிகர்களுக்கும் ஒரு ஊக்கக் காரணியாக செயல்படும்.
2. அதேசமயம் உயர் பணவீக்கம் பணத்தின் மதிப்பினைக் குறைப்பதன் மூலம், மக்களின் சேமிப்பைக் குறைக்கும்.
3. பணவீக்கத்தின் காரணமாக பணத்தின் மதிப்பு குறிப்பிடத் தகுந்த அளவு குறைவதால் நாட்டில் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கும் வெளிநாட்டு மூலதனங்கள் திரும்பிச் செல்லும்.

**ஆ. பகிர்வின் மீதான விளைவுகள் :** நாட்டு வருமானப் பகிர்வில் உள்ள பல்வேறு தரப்பினரையும் பணவீக்கம் பல்வேறு வகையில் பாதிக்கின்றது. அவைகள் கீழே தரப்பட்டுள்ளன.


**1. கடன் பெற்றோர் கடன் வழங்கியோர் :** பணவீக்கக் காலத்தில் கடன் பெற்றோர் ஆதாயமும், கடன் வழங்கியோர் இழப்பையும் சந்திக்கின்றனர்.

**2. தொழில் முனைவோர்கள் :** உற்பத்தியாளர், வணிகர் என தொழில் முனைவோர் போன்று எவ்வகையானவராக இருந்தாலும், அவர்களுக்குப் பணவீக்கம் ஒரு வரமாகும்.

**3. முதலீட்டாளர்கள் :** கடன் பத்திரங்களில் முதலீடு செய்தோர் நிலையான வட்டியைப் பெறுவதால் அவர்கள் பணவீக்கக் காலத்தில் இழப்பினைச் சந்திப்பார்கள்.

24) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

**பதில் : இலக்கணம் :**"உயர்கின்ற விலைகளையும், குறைந்த வேலையற்றோர் விழுக்காட்டையும் கொண்ட நல்ல வணிகக் காலங்களையும்; குறைகின்ற விலைகளையும், மிகுகின்ற வேலையில்லாத் திண்டாட்ட விழுக்காட்டையும் கொண்ட கெட்ட வணிகக் காலங்களையும் உள்ளடக்கியது வணிகச் சூழல் ஆகும்." -J.M. கீன்ஸ்




**பூரிப்பு கட்டம் (Boom):**

1. நீண்டகால இயல்பான வளர்ச்சி நிலைக்கு மேல் பொருளாதார நடவடிக்கைகள் உயர்ந்து முழு வேலைவாய்ப்பு நிலையைத் தாண்டுவது வணிகச் சூழலின் வளர்ச்சிக் கட்டம் எனப்படுகிறது.
2. பூரிப்பு நிலையில் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்.

**பின்னிறக்கம் (Recession) :**

1. வளர்ச்சியின் உச்சத்தில் பூரிப்பை எய்திய பொருளியல் நடவடிக்கைகள் அடுத்ததாக கீழ்நோக்கித் திரும்புகின்றன. பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடவடிக்கைகள் பின்னோக்கி திரும்புவதைப் பின்னிறக்கம் என்கிறோம்.
2. நம்பிக்கைகள் இருந்த இடத்தில் அவநம்பிக்கைகள் தோன்ற ஆரம்பிக்கும். இதன் காரணமாக முதலீட்டை பெருமளவுக்குக் குறைக்க ஆரம்பிப்பார்கள்.
3. பங்குச் சந்தையில் விலை வீழ்ச்சியின் காரணமாக பெரும் அச்சம் உருவாகும்.

**மந்தம் (Depression):**

1. மந்த காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு கீழ் மிகத் தீவிரமாக குறைந்து வரும். நிறுவனங்கள் நட்டமடைவதும், மூடப்படுவதும் பொது இயல்புகளாக இருப்பதுடன் வேலைவாய்ப்பின்மையையும் ஏற்படுத்தும்.
2. வணிகச் சுழற்சியின் மிகமோசமான கட்டம் மந்தம் ஆகும்.

**மீட்சி (Recovery or Revival) :**

1. மந்த நிலைக்குப் பின் மீட்சி இடம் பெறுகிறது. இது மந்தத்திலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும்.
2. பொருளாதார நடவடிக்கைகளை மேல்நோக்கி திரும்ப ஊக்கமளிக்கின்றன.
3. இதனால், தனியார் முதலீடுகள் மெதுவாக அதிகரித்து, பொருளாதார நடவடிக்கைகளான வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

25) பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை?

**பதில் :** கீன்ஸ் மற்றும் மில்டன் ப்ரீட்மேன் கருத்துப்படி, பணவீக்கத்தினை கட்டுப்படுத்தும் வழிகளை மூன்றாக பிரிக்கலாம்.

அவை:

1. பணவியல் முறைகள்
2. நிதியியல் முறைகள் (JM கீன்ஸ்) மற்றும்
3. இதர முறைகள்

I. பணவியல் முறைகள்

பணவியல் முறைகள் நாட்டின் மைய வங்கியினால் அமல்படுத்தப்படும் முறைகள்.

அவைகள்:

1) வங்கி விகிதத்தை உயர்த்துதல்
2) வெளிச்சந்தையில் அரசு பாத்திரங்களை விற்றல்
3) ரொக்க இருப்பு விகிதத்தை உயர்த்துதல் மற்றும் சட்டப்பூர்வ நீர்மை விகிதத்தை உயர்த்துதல்.
4) நுகர்வோர் கடனை கட்டுப்படுத்துதல்
5) கடன் விளிம்பு நிலையினை உயர்த்துதல்
6) மீள் வாங்கல் விகிதம் மற்றும் திருப்ப மீள் வாங்கல் விகிதம் ஆகியவற்றினை உயர்த்துதல் ஆகும்.

II. நிதியியல் நடவடிக்கைகள்:

பணவீக்கத்தின் போது அரசு செலவினங்களைக் குறைப்பது, பொதுமக்களிடமிருந்து கடன்களை பெறுவது மற்றும் வரி விதிப்புகளை விரிவாக்குவது போன்ற நிதியியல் நடவடிக்கைகள், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன.

III. இதர நடவடிக்கைகள்:

இதர நடவடிக்கைகள்:

இதர நடவடிக்கைகள் குறுகிய கால நடவடிக்கைகள்மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளன.

a) குறுகிய கால நடவடிக்கைகள்:

குறுகிய கால நடவடிக்கையாக பொது விநியோக முறையின் கீழ் நியாயவிலை கடைகளில் அத்தியாவசிய பொருட்களை பங்கீடு செய்து விலை உயரா வண்ணம் தடுக்கப்படுகிறது.

b) நீண்ட கால நடவடிக்கைகள்:

நீண்ட கால நடவடிக்கையாக பொருளாதார வளர்ச்சியை அடையும் நோக்கில் சேமிப்பு முதலீடுகளை மேம்படுத்துதல். மேலும் பொது விலை மட்டத்துடனும், வாழ்க்கைச் செலவுடனும் நேரடி தொடர்பு கொண்டுள்ள கூலிப் பொருட்களின் உற்பத்தியை அதிகப்படுத்துதல் பணவீக்கத்தை தடுக்கும் வழிமுறைகளாகும்.